**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 291/2025 |
| Name | : Ponnuthai |
| P.W. | : 1 |
| Spouse Name | : Umapathy Easwaran |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.06.2026**

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் ருத்திரபாளையத்தில் வசிக்கிறேன். குப்பம்பாளையம் ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளியில் தலைமை ஆசிரியராக உள்ளேன். 16.07.2025 ம் தேதி பள்ளி முடிந்த உடன் நாங்கள் அலுவலக அறைகள் மற்றும் பள்ளியை பூட்டி சென்றுவிட்டோம். 17.07.2025 மற்றும் 18.07.2025 ஆகிய தேதிகளில் 3 ஆசிரியர்களும் தற்செயல் விடுப்பில் சென்றுவிட்டோம். 19.07.2025 மற்றும் 20.07.2025 ம் தேதி சனி, ஞாயிறு விடுமறை நாட்கள். 21.07.2025 ம் தேதி காலை 08.45 மணிக்கு பள்ளியை திறந்து அலுவலக அறையை திறந்த போது உள்ளே இருந்த பீரோ உடைந்திருந்தது. மற்ற இரு ஆசிரியர்களையும் அழைத்து காட்டி பேசினேன் அறையில் இருந்த இரண்டு Lenovo மடிக்கணிணிகள் acer கையடக் கணிணி (tablet) மற்றும் கலைஞர் டிவி –1, மைக்குடன் கூடிய ஸ்பீக்கர் செட் ஆகியவை காணாமல் போயிருந்தது. அருகில் பார்த்தோம் அறையின் பின்னால் இருந்த ஜன்னல் கம்பி வளைந்திருந்தது. அருகில் விசாரித்துப் பார்த்தோம் எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை மேல் அதிகாரிக்கு தகவல் சொல்லி பேசினோம். அவர்கள் அறிவுரையின் பேரில் 22.07.2025 ம் தேதி காவல் நிலையத்தில் புகார்

கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் இரும்பு கம்பி அலுவலக அறையின் பின்னால் இருந்தது. **இரும்பு கம்பி அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 28.07.2025ம் தேதி காவல் நிலையத்தில் இருந்து பொருட்களை எடுத்தவர்களை கண்டுபிடித்துவிட்டதாகவும் பொருட்களை அடையாளம் காட்ட கூப்பிட்டார்கள். நான் காவல் நிலையம் சென்று அடையாளம் காட்டினேன். இரண்டு Lenovo மடிக்கணிணிகள் acer கையடக் கணிணி (tablet) மற்றும் கலைஞர் டிவி –1 ஆகியவற்றை இடைக்காலமாக நீதிமன்றத்தில் இருந்து பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இரண்டு Lenovo மடிக்கணிணிகள் அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது, acer கையடக் கணிணி (tablet) புகைப்படம் அ.சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது மற்றும் கலைஞர் டிவி –1 புகைப்படம் அ.சா.பொ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**2ம் எதிரி தரப்பில் இதே குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

(1) நான் ருத்திரபாளையத்தில் குடியிருக்கிறேன். நான் பொதுவாக 08.30 மணி முதல் 08.45 மணிக்குள் பள்ளிக்கு செல்வேன். பள்ளி சம்மந்தமான சாவிகளை நான் தான் வைத்திருப்பேன் என்றால் சரிதான். என்னுடன் சேர்த்து மொத்தமாக 3 ஆசிரியர்கள் வேலை செய்கிறோம். வேறு ஊழியர்கள் யாரும் இல்லை. நாங்கள் விடுப்பில் சென்றதாக சொன்ன 2 நாட்களும் பள்ளி விடுமுறையில் இருந்ததா என்றால் ஆமாம். 15ம் தேதி முதல் 20ம் தேதி வரை தொடர்ந்து 4 நாட்கள் பள்ளி பூட்டி தான் இருந்தது என்றால் சரிதான். விடுமறை நாட்களில் பள்ளிக்கு வந்து பார்க்கும் பழக்கம் இல்லை. மடிக்கணிணி மற்றும் tablet க்கான வரிசை எண்களை புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். அடையாளம் காண்பிக்கும் போது அதற்கான ஆவணத்தை கொண்டு வந்தேன். அரசாங்கத்தால் இந்த பொருட்கள் எங்கள் பள்ளிக்கு கொடுக்கப்பட்டது என்பதை காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(2) மடிக்கணிணி மற்றும் tablet ஆகியவை பள்ளி பயன்பாட்டிற்காக உள்ள

பொருட்கள். காவல் நிலையத்தில் என்னை விசாரித்தார்கள். அ.சா.பொ.1 பற்றி புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசார் வந்து பார்த்த போது இருந்தது. போலீசார் இரண்டு முறை விசாரித்தார்கள். 20.07.2025ம் தேதி இரவு ஜன்னர் கம்பியை நெம்பி உள்ளே சென்று திருடியதாக எனக்கு எப்படி தெரியும் என்றால் போலீசார் சொல்லி தான் தெரியும். 1ம் எதிரியை தெரியாது.

(3)21.07.2025 ம் தேதி பள்ளியை காலை உணவு அமைப்பாளர் கமலா என்பவர் திறந்தார். காலை 08.45 மணிக்கு அலுவலக அறையை நான் தான் திறந்தேன். காலை உணவு அமைப்பாளர் பொருட்கள் காணாமல் போனதாகவோ கம்பி நெம்பி உள்ளது பற்றியோ சொல்லவில்லை என்றால் சரிதான். அலுவலக அறையை திறக்கும் போது நான் மட்டும் தான் இருந்தேனா என்றால் உடன் 2 ஆசிரியர்கள் இருந்தார்கள். காணாமல் போன பொருட்களை 28.07.2025ம் தேதி காவல் நிலையத்தில் வைத்து பார்த்தேன். 1ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.பொ.1 வழக்குச் சொத்திற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பொருட்களின் மதிப்பை புகாரின் அனுமானத்தின் பேரில் தெரிவித்தேன்.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.06.11 18:21:17 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 291/2025 |
| Name | : Latha |
| P.W. | : 2 |
| Spouse Name | : Kanagaraj |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.06.2026**

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மடத்துக்குளத்தில் வசிக்கிறேன். குப்பம்பாளையம் ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளியில் இடைநிலை ஆசிரியராக உள்ளேன். **16.07.2025** ம் தேதி நானும், தலைமை ஆசிரியர் பொன்னுத்தாய் மற்றொரு இடைநிலை ஆசிரியர் குருலட்சுமி ஆகியோர் மாலை **04.30** மணிக்கு பள்ளியை பூட்டிவிட்டு சென்றோம். **17.07.2025** மற்றும் **18.07.2025** ம் தேதி மூன்று பேரும் தற்செயல் விடுப்பில் இருந்தோம். **19.07.2025** மற்றும் **20.07.2025** ம் தேதி சனி மற்றும் ஞாயிறு மொத்தம் **4** நாட்கள் பள்ளி விடுறை விடப்பட்டிருந்தது. **21.07.2025** ம் தேதி காலை பள்ளிக்கு வந்தோம். நான் எனது வகுப்பறையில் இருந்தேன். காலை **08.45–08.50** மணிக்கு தலைமை ஆசிரியர் மற்றும் குருலட்சுமி வந்தார்கள். தலைமை ஆசிரியர் அவரது அறையை திறந்தார். அப்போது உள்ளே இருந்த பீரோ திறந்திருந்தது நாங்கள் மூன்று பேரும் உள்ளே சென்று பார்த்தபோது பீரோ திறந்த நிலையில் இருந்தது. சந்தேகப்பட்டு பார்த்தபோது பீரோவில் இருந்த **2 lenovo** மடிக்கணிணி, **acer** கையடக்க கணிணி காணாமல் போயிருந்தது. தலைமை ஆசிரியர் அறையில் ஒரு கலைஞர் தொலைகாட்சி பெட்டி, **fuse** ஸ்பீக்கர் **–1** காணாமல் போயிருந்தது. தலைமை ஆசிரியல் அறையின் பின்பக்க ஜன்னல் கம்பி வளைந்திருந்தது. இது சம்மந்தமாக

தலைமை ஆசிரியர் உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தார். **22.07.2025**ம் தேதி தலைமை ஆசிரியர் கொமரலிங்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள அ.சா.பொ.2 இரண்டு Lenovo மடிக்கணிணிகள், அ.சா.பொ.3– acer கையடக் கணிணி (tablet) மற்றும் அ.சா.பொ.4 கலைஞர் டிவி –1 ஆகியவை தான் காணாமல் போன பொருட்கள் ஆகும். பொட்கள் கிடைத்துவிட்டதாக சொன்னார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**2ம் எதிரி தரப்பில் இதே குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

(1) வழக்கமாக நான் காலை 08.30 மணிக்கு பள்ளிக்கு வருவேன். 21.07.2025ம் தேதி தலைமை ஆசிரியர் வருவதற்கு முன்பே நான் பள்ளிக்கு வந்து எனது வகுப்பறையில் இருந்தேன். 21.07.2025ம் தேதி குருலட்சுமி எத்தனை மணிக்கு வந்தார் என்றால் தெரியவில்லை. தலைமை ஆசிரியர் அறைக்கு ஒன்றாகத்தான் சென்றோம். பள்ளியில் ஒரே கட்டிடத்தில் நான்கு தனி அறைகள் உள்ளது அதில் ஒன்று தலைமை ஆசிரியர் அறை. பள்ளியில் சுற்றுச் சுவர் உள்ளது. காலை உணவு அமைப்பாளர் காலை 06.00–06.15 மணி அளவில் வருவார். கிராமம் சார்ந்த பள்ளி என்பதால் காலையில் 07.00 மணி முதல் 08.30 குழந்தைகள் வந்துவிடுவார்கள் என்றால் காலை 08.00 மணிக்கு மேல் வருவார்கள். பள்ளியைச் சுற்றிலும் குடியிருப்புகள் உள்ளது என்றால் சரிதான். சுமார் 4–5 வீடுகள் உள்ளது. தலைமை ஆசிரியர் அறையின் ஜன்னல் சுற்றுச் சுவருக்கு வெளியே இருந்து பார்த்தால் தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் என்னை இரண்டு முறை விசாரணை செய்தார்கள். தற்போது சொன்னது போல் தான் விசாரணையின் போதும் சொன்னேன். இந்த வழக்கிற்கும் 1ம் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M
Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.06.11 18:21:25 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 291/2025 |
| Name | : Selvaraj |
| P.W. | : 3 |
| Father Name | : Karuppusamy |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.06.2026**

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் குப்பம்பாளையத்தில் வசிக்கிறேன். விவசாயம் செய்கிறேன். பேரூராட்சி உறுப்பினராக உள்ளேன். குப்பம்பாளையம் ஊராட்சி ஒன்றிய ஆரம்ப பள்ளியில் மேலாண்மை குழுவில் உள்ளேன். கடந்த வருடம் ஜுலை மாதம் 22ம் தேதி காலை 11.00 மணி அளவில் பள்ளிக்கு சென்றேன். திருட்டு சம்மந்தமாக போலீசார் விசாரிக்க வந்திருந்தார்கள். நான் அங்கு இருந்தேன். போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். என்னுடன் முன்னாள் பேரூராட்சி உறுப்பினர் ராஜேந்திரன் கையெழுத்து போட்டார். என்னிடம் காட்டப்படும் பார்வை மஜரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**2ம் எதிரி தரப்பில் இதே குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

(1) நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிவர தெரியாது. நான் தற்போதும் பேரூராட்சியில் உறுப்பினராக உள்ளேன். பள்ளி மேலாண்மை குழுவில் உள்ளேன். அடிக்கடி பள்ளிக்கு செல்வேன் என்றால் சரிதான். தொடர்ந்து 5–6 நாட்கள் பள்ளி விடுமுறையில் இருந்தால் நான் பள்ளிக்கு சென்று பார்ப்பேனா என்றால் இல்லை. ராஜேந்திரன் எனக்கு நல்ல பழக்கம் என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு பொதுப் பிரச்சனைக்காக போகும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. நான் பேரூராட்சி உறுப்பினராக உள்ளதாலும், பள்ளி மேலாண்மை குழுவில் உள்ளதாலும் தலைமை ஆசிரியர் கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல போலீசார் விசாரணை செய்து வரைபடம் எதுவும் வரையவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.06.11 18:21:30 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 291/2025 |
| Name | : Rajendran |
| P.W. | : 4 |
| Father Name | : Nagaraj |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**11.06.2026**

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் குப்பம்பாளையத்தில் வசிக்கிறேன். விவசாயம் செய்கிறேன். **22.07.2025** ம் தேதி பள்ளியில் திருட்டு போனதாக சொன்னார்கள். அதை பார்ப்பதற்காக நான் காலை **11.00** மணிக்கு பள்ளிக்கு சென்றேன். போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். என்னுடன் செல்வராஜ் கையெழுத்து போட்டார். என்னிடம் காட்டப்படும் பார்வை மஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**2 ம் எதிரி தரப்பில் இதே குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

(1) நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று தெரியும். என்ன எழுதியிருந்தது என்றால் திருட்டு போனது மற்றும் விசாரணை செய்தது சம்மந்தமாக

எழுதியிருந்தது. நான் சொல்வது போல விசாரணை செய்யவில்லை என்றும் வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பள்ளி மேலாண்மை குழுவில் உள்ளதாலும் தலைமை ஆசிரியர் கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.06.11 18:21:35 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்